# Ottawa Tamil Association

# ஒட்டாவா தமிழ் ஒன்றியம்

ஒட்டாவா தமிழ் ஒன்றியம் வழமை போன்று தை மாத தமிழ் மரபுத் திங்கள் விழாவுடன் 2022 ஆண்டைத் தொடங்கியது. பெரும் தொற்று நீடிப்பதன் காரணமாக,இந்த ஆண்டும் மெய்நிகர் வழியாக தமிழ் மரபுத் திங்கள் விழா நடைபெற்றது. இரு மணி நேர நிகழ்வுகள், கனடிய அரசு ஒன்றாரியோ அரசு மற்றும் ஒட்டாவா நகர பிரதிநிதிகளின் உரைகளுடன் தமிழ் மரபு சார் கலை நிகழ்வுகளுடன் தமிழீழ வரலாறு மற்றும் தமிழின அழிப்பிற்கு நீதி பற்றிய சிறப்புரைகளுடன் பல ஆயிரம் மக்கள் பார்க்கும் வகையில் IPTV மற்றும் இணையம் வழியாக நடைபெற்றது.https://youtu.be/vMj5XtzYwa8.




ஒட்டாவா தமிழ் ஒன்றியமும் பல கனடிய தமிழ் அமைப்புகளும் ஒருங்கே தமிழின அழிப்பு நினைவு நாளை கனடிய பாராளுமன்ற முன்றலில் ஒழுங்கு செய்திருந்தனர். மே 18, 2022 அன்று கனடிய பாராளுமன்றம் சிறிலங்கா அரசினால் தமிழின அழிப்பு நடைபெற்றதை ஓர் முன் மொழிதல் மூலமாக அனைவரும் ஏற்றுக் கொண்டனர். அத்துடன் மே 18 ஐ தமிழின அழிப்பு நினைவு நாள் எனவும் வழி மொழிந்தனர். பல வருடமாக கனடிய தமிழ் அமைப்புகளும் ஒட்டாவா தமிழ் ஒன்றியமும் விடுத்து வந்த கோரிக்கை ஒன்றுக்கு கனடிய பாராளுமன்றம் செவிமடுத்து தமிழ் மக்களுக்கு நீதிக்கான சிறு ஒளியொன்றைக் காட்டி நம்பிக்கை ஊட்டியிருந்தது.

*https://www.einpresswire.com/article/573298886/canadian-parliament-recognizes-the-genocide-of-tamils-in-sri-lanka-and-tamil-genocide-remembrance-day-may-18*

தியாகி திலீபன் நினைவு நிகழ்வாக கனேடிய உணவு வங்கிக்கு உணவுப் பொருளை நன்கொடை வழங்கி இருந்தது. நியூயார்க்கில் நடைபெற்ற வட அமெரிக்க தமிழ்ச்சங்க பேரவையின் (FetNA) 35 ஆவது பேரவை தமிழ் விழாவிலும் மற்றும் உலக தமிழ் அமைப்புகளின் பேரவை(FGTO) விழாவிலும், ஒட்டாவா தமிழ் ஒன்றியம் கலந்து கொண்டது.

**அழகன்குளம், வைகை நதியின் கரையில் உள்ள ஒரு கிராமம் என்பது நாம் அறிந்ததே. அழகன் என்பது இன்று ஆப்கானிஸ்தானில் உள்ள ஒரு கிராமத்தின் பெயரும் கூட என்பது உங்களுக்குத் தெரியுமா?**